**<u>தேதி: 14.02.2023</u>**

**அ.வ.எண்.09/2015**

**வா.சா.1 ஜானகி க/பெ.வரதராஜன்**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் கணவர் விசைத்தறி எழுதிக்கொடுத்துள்ள விற்கிரைய ஒப்பந்தம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் என்னுடைய விசைத்தறிகளை ஈடுகட்டி வாங்கிய தொகைக்கு உண்டான அசல் வட்டி முழுவதும் மேற்படியாருக்காக ஜானகி ஆகிய நானே கட்டிவிட்டேன் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ-2 ஆவணத்தில் குறிப்பிட்ட தேதியில்தான் அவருடைய சொத்து சம்மந்தமாக 2 செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வாங்கும் போது என் கணவருக்கு தெரியாமல் வா.சா.ஆ-2 ஆவணத்தையும் வைத்து கையொப்பம் வாங்கிவிட்டோம் என்றால் சரியல்ல. அதனால்தான் வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாசகங்கள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் என் கணவரை ஏமாற்றி வாங்கியுள்ளதால் அது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

3. நானும் என் கணவரும் 1992ல் பிரிந்து விட்டோம் என்றும் அப்போதெல்லாம் இந்த வழக்கை தாக்கல் செய்யாமல் தற்போது என் மகன் மகள் வசதியாக இருக்கும் காலத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதற்கு காரணம் என்ன என்றால் தற்போது எனக்கு வயதாகிவிட்டதால் பராமரிக்க தற்போது பணம் தேவைப்படுவதால் வழக்கு போட்டுள்ளேன். என் மகன் மகள் தாக்கல் செய்திருந்த பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் இருப்பதால் என் கணவரை மிரட்டி பணிய வைக்க இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. என் கணவர் எனக்கு எழுதிக்கொடுத்த தறி குடோன் மூலமாக மாத

வாடகை ரூ.35,000/- வருகிறது என்றும் அதனை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொத்துக்களை மறைக்க வேண்டித்தான் எனது தரப்பில் மேற்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமாக திருப்பூர் காலேஜ் ரோட்டில் சுமார் 40 கோடி மதிப்புள்ள வீடு, இடம், கம்பெனி உள்ளது என்றும் அவைகளை மறைத்து இந்த தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. என் தகப்பனார் எனக்கு ஒன்றரை கோடி மதிப்பிலான சொத்துக்கள் கொடுத்துள்ளார் என்றும், அதிலிருந்தும் எனக்கு வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்று கேட்டால் இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றும் தற்போது அதனை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முன்பு வரி செலுத்தி வந்தேன் தற்போது இல்லை. என் பெயரில் என் மருமகன் வருமான வரி செலுத்தி இருக்கலாம்.

6. அந்த கம்பெனி என் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் இல்லை. என் மருமகனை சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்று கேட்டால் தயாராக உள்ளேன். நான் நன்றாக வசதியாக வாழ்ந்து வருவதற்கு ஆதாரமாக 3 கார்கள் மாருதி சென், டொயாட்டோ குவாலிஸ், ஹோன்டா சிட்டி, மற்றும் ஒரு இருசக்கர வாகனம் உள்ளது என்றால் சரியல்ல. நான் வசதியாக வாழ்ந்து கொண்டு பொய்யாக இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் என் கணவரும் 1992 ஆம் வருடத்திலேயே பிரிந்து விட்டதாலும் தற்போது என் மகனும் மகளும் நல்ல வசதியாக இருக்கின்ற காரணத்தினாலும் தற்போத என் கணவரிடம் ஜீவனாம்சம் கோரி வழக்கு தொடரவேண்டிய அவசியமே இல்லை என்றாலும் சரியல்ல.

7. என் கணவர் நோய்வாய்ப்பட்டும், விபத்தினாலும் அவருக்கு சம்பாதிக்கும் திறன் இல்லை என்பதாலும் தற்போது எந்த வருமானமும் இல்லாமலும் என் கணவர் இருக்கிறார் என்றால் சரியல்ல. என் கணவரின் 2 வது மனைவி தான் வேலைக்கு சென்று என் கணவரை காப்பாற்றி வருகிறார்

என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்./— எஸ்.வடிவேல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)

பல்லடம்.